Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 06 உ செவ்வாய்க்கிழமை (23 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 03 ஓசை 238

## கோயில் மூலவிக்கிரகங்கள் தங்க நகைகள் திருட்டு

(கொழும்புத்துறை)

வண்ணை விக்னேஸ்வர ஸ்ரீ விநாயகர் ஆலயம், வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் சிவன்பண்ணை வீதி நல்லதண்ணீர்க் கிணறு அருள்மிகு ஞானவைரவர் ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்களிலும் மூலவிக்கிரகம் கிளப்பப்பட்டும், விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த தங்கநகைகள் உட்பட மூன்று ஆலயங்களிலும் பெறுமதி மிக்க (4ஆம் பக்கம் பார்க்க)

### வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், மாவிட்டபுரம்

# ராணுவ நிலைகள் மீது புலிகள் பல முனைத் தாக்குதல்

(மாவிட்டபுரம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஆறு நாட்களுக்கு முன்னர் வெளியேறி வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், மாவிட்டபுரம் பகுதிகளில் நிலை கொள்ள எத்தனிக்கும் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அப்பகுதியில் தொடர்ச்சியான மோதல்கள் இடம் பெற்று வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இராணுவத்தினரின் புதிய நிலைகள் மீது விடுதலைப்புலிகள் தொடர்ச்சியான தாக்குதல்மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு 1. 30 மணியளவில் வயாவிளான் பகுதியில் வெளியேற மூற்பட்ட படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கடும் துப்பாக்கிச் சண்டையினால் இராணுவத்தினர் தமதுமுயற்சிகளைக்கைவிட்டு முகாமிற்குள் முடங்கினர்.

இதைத்தொடர்ந்து கட்டுவன் பகுதியிலும் புலிகளுக்கும்இராணுவத்திற்கும் இடையில் கடும் துப்பாக்கிச்சண்டை நடைபெற்றது. இச்சண்டைகளில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றித் தெரியவரவில்லை.

அதேவேளை நேற்றுப்பகல் மாவிட்டபுரம் பகுதியில் தமது நிலைகளைப் பலப்படுத்த எத்தனித்த இராணுவத்தினர் மீது புலிகள் ஷெல் தாக்குதலையும், துப்பாக்கித் தாக்குதலையும் தொடுத்தனர். இதனால் தமது முயற் (4 ஆம் பக்கம் பார்க்க)



பலாலி இராணுவத்தினருடனான மோதலில் கடந்த பத்தொன்பதாம் திகதி வீர மரணமடைந்த முன்னாள் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் மேஜர் அன்ரனி.

## இரு புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான மோதலின்போது விடுதலைப்புலிகள் தரப்பில் முத்து, லிங்கம் ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (மு)

## வீட்டு முற்றத்தில் நின்றவர் விமானக் குண்டு வீச்சுக்குப் பலி

(நல்லூர்)

கோப்பாயில் நேற்றுக் காலை இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் வீட்டு முற்றத்தில் நின்ற ந. வினாசித்தம்பி (வயது 65) என்பவர் மரணமானார்.

நேற்றுக் காலை 9. 30 மணியளவில் இரண்டு பொம்மர் விமானங்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டன.

இந்தத் தாக்குதலின்போது மேலும் இருவர் காயமடைந்னர். வினாசித்தம்பி சோதி, செல்லையா ஆகியோரே இவர்கள் ஆவர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனில் மூன்று புலிகள் வீர மரணம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் மிருசுவிலைச் சேர்ந்த மகேஸ் (வல்லிபுரம்-இராமச்சந்திரன்) உட்பட மூன்று போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (க)

## 24 மணி நேரத்தில் மட்டும் 7படையினர் பலி 40பேர் படுகாயம்

(கொழும்பு)

கடந்த இருபத்தி நான்கு மணி நேரச் சண்டையின் போது ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதாகவும், நாற்பதிற்கு மேற்பட்டோர் படு காயமுற்று இருப்பதாகவும் அரச பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ் வட்டாரங்கள் மேலும் தகவல் தருகையில் வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், மாவிட்டபுரம் பகுதிகளை இராணுவம் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சென்றடைந்த போதும் தொடர்ந்தும் கடும் தாக்குதலைச் சந்திக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தது.

## கிரான்குளம்சுற்றிவளைப்பு; 4 இளைஞர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கிரான்குளம் இராணுவத்தினர் இராணுவமுகாமைஅண்டியுள்ள பகுதிகளைச் சுற்றிவளைத்துத் தேடுதலை மேற்கொண்டதில் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர், இவர்களில் நால்வர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர், நால்வர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த சனிக்கிழமை கிரான்குளம் இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதியைச் சிறிலங்கா இராணுவத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் படகு மீது கடற்படைதாக்கு; ஒருவர்பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணைக் கடற்பகுதியில் படகில் சென்று கொண்டிருந்த அப்பாவித் தமிழ் மக்கள்மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் துறைநீலாவணையில் இருந்து அண்ணாமலை நோக்கி படகு ஒன்றில் சென்றுகொண்டிருந்த சமயம் சிறிலங்கா கடற்படையினர் இவர்களை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில் பத்துப் பிள்ளைகளின் தந்தையான சீனித்தம்பி முருகுப்பிள்ளை (வயது (4ஆம் பக்கம் பார்க்க)

## தளவாயில் இளம் பெண் மானபங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தளவாய் என்ற கிராமத்தில் கடந்த ஞாயிறு தேடுதல் நடத்திய சிறிலங்கா இராணுவத்தினரும் சிங்கள ஊர்காவற் படையினரும் இக்கிராமத்தைச் சேர்ந்த தமிழ்பெண் ஒருவரை மானபங்கப் படுத்தியுள்ளனர். (க)

### நிவாரணப் பொருள் விநியோகம்

## நான்காம் கட்ட விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் கட்ட நிவாரணத்தை மக்களுக்குகொடுத்து முடித்துவிட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தமது நான்காம் கட்ட கொடுப்பனவுகளை ஆரம்பிக்கலாம் என செயலக வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்த 4 ஆம் கட்ட கொடுப்பனவு ஆரம்பிப்பதற்கு முன்பு மூன்றாம் கட்ட கொடுப்பனவு முழுமையாக முடிக்கப் பட்டிருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (லோ)

### ராமஜென்ம பூமி-பாபர் மசூதிப் பிரச்சினை

## தேசிய பொதுக்கருத்தை எட்ட ஆறு முதலமைச்சர்குழு தெரிவு

(புதுடில்லி)

பாபர்மசூதி- ராம ஜென்ம பூமி தகராறினால் தேசிய ரீதியில் பொதுக்கருத்து ஒன்றை எட்டும் முகமாக ஆறு முதலமைச்சர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பதினாறு மாநிலமுதலமைச்சர்களும், மத்திய அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கிக்கு 5 மில். பணம் வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

இம் முறை கப்பலில் பருத்தித்துறையில் வந்திறங்கிய உணவுப் பொருள்களுடன் இலங்கை வங்கிக்கு ஐந்து மில்லியன் திரவப் பணமும் வந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பணத்தின் வருகையைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திற்குள் உள்ள வங்கிக்கிளைகளில் பணக்கொடுப்பனவுகளின் அளவுஅதிகரிக்கப் படும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. (லோ

## தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் செட்டிபாளையம் என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இப்பகுதிக்கு தேடுதல் நடத்துவதற்கு வந்த படையினர் பிச்சைப்பிள்ளை நற்குணராசா (வயது 30) என்ற இளைஞரையே சுட்டுக்கொன்றனர், (க)

## நிதிநெருக்கடியினால் சேவையில் மந்தநிலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சுழற்சி மூலதனம் வங்கியில் முடங்கி இருப்பதனாலும், இலவச உலர் உணவு விநியோகம் காரணமாக ரொக்க விற்பனை இல்லாமையாலும் இச்சங்கம் தொடர்ந்து சீரான சேவையை செய்வதற்கு கையிருப்பில் பணம் இல்லாத நிலையில் பாரிய நிதி நெருக்கடியை எதிர் நோக்கி உள்ளது.

## வரிவிளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்
### [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப் படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B–1510)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B/1509)

### தேவை

நன்கு பயிற்றப்பட்ட அனுபவமுடைய தாதிமார் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். சான்றிதழ்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். வைத்திய பொறுப்பதிகாரி, சென்றல் நேர்சிங் ஹோம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (R-736)

### ரதி வோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B-1459)

### கிளீன்கட் போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை உடனடியாக பெற்றுக்கொள்ளவும், அடையாள அட்டைகளுக்கு கவரிட்டு கொள்வதற்கும் கிளீன் கட் 37 சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (யாழ். இந்து மகளிர் கல்லூரிச்சந்திக்கு அருகாமையில்) (R/754)

### இடமாற்றம்

அம்பிகாபதி பென்சி கூட்ஸ் 66, பெரியகடை, யாழ்ப்பாணம். மேற்படி விலாசத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனத்தைவாடிக்கையாளரின் பாதுகாப்பு கருதி 54, அம்மன் றோட், நல்லூரிற்கு (வீரமாகாளி அம்மன் கோயில் அருகாமை) மாற்றியுள்ளோம் என்பதை மீண்டும் அறியத் தருகின்றோம். (R/757)


## இழுவைப் படகு கரை ஒதுங்கியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் கடற்கரை ஓரமாக இழுவைப் படகொன்று கரை ஒதுங்கியுள்ளது. இப்படகு சென்ற தடவை மா ஏற்றி வந்த கப்பலில்இருந்து மாவை இறக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

இப்படகு கொண்டல் காற்றினால் ஒதுக்கப்பட்டு மண்ணேறி உள்ளது. இதனை இழுத்து எடுப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. படகு கைவிடப்பட்ட நிலையில் உள்வது. (58)

### இன்பத்தேன் செவிகளில் பாயச் செய்யும்

# இந்த மண் எங்களின் சொந்த மண்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினால் வெளியிடப்பட்ட 'இந்தமண் எங்களின் சொந்த மண்' எனும் தமிழ் ஈழ எழுச்சிப் பாடல்கள் கொண்ட ஒலிப்பதிவு நாடாத்தொகுப்பு கேட்டேன். இன்றைய ஈழ மண்ணின் நிகழ்வுகளையும் அதன் கோலங்களையும் உள்ளடக்கி, வீர உணர்வுகளை வெளிக் கொணர்ந்தும், ஈழத்தின் துயரங்களை எடுத்து இயம்புகின்றதுமான முத்தான பத்துப் பாடல்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு பாடலும் ஈழ மண்ணின் அவலங்களையும், விடுதலைப்புலிகளின் வீர தத்துவங்களையும் வெளிக்காட்டுகின்றது. பாடல்களை ஆக்கிய புரட்சிக் கவிஞர்கள் மிக இலகுவான சொற்பதங்களை உபயோகித்து, தத்ரூபமாக பாடல்களை இயற்றியுள்ளார்கள். கேட்கும்போதுஎம்மையறியாமலே ஈழ மக்களின் உணர்வுகள் மனதில் கோலம் போடுகின்றன.

''உயிரிலும் மேலான தாய் நாடு - இன்று உடலங்கள் எரிகின்றபேய்வீடு'' என்றுதொடங்கும் உணர்ச்சிப் பாடல்ஒன்றில் தொடர்ந்து வரும் வரிகளான,

''பயமின்றி நாம் வாழ்ந்த சிறு கூடு - இன்று பாதகரால் சிதைந்த மண்மேடு'' என்று ஈழ நிலையை உணர்த்தியும் அதற்கேற்றாற் போல அதற்குரிய பரிகாரவழியாக, தொடர்ந்துவரும் வரிகளான,

''துணிவோடு நீவந்துபடை சேரு - புலி துளியேனும் நிலை மாறிப் போகாது,! அணியாஇப் புலியாகிப் போராடு!! நீ அழிவாகிப் போனாலும் வரலாறு!!!'' என்று மிக அழகாக அழுத்திக் கூறும் கவிஞரின் வரிகள் மிகவும் முக்கியமானவையாகத்தெரிகின்றன. அதேபோல,

''இந்த மண் எங்களின் சொந்த மண் - இதன் எல்லையை மீறியார் வந்தவன்'' என்று தொடங்கும் இனிமையான பாடலில் தொடர்ந்து வரும் வரிகளான- ''நீர்வளம் உண்டு! நிலவளம் உண்டு! நிம்மதி ஒன்றுதானில்லை'' என்ற வரியும்,

''பூமலர்ந்ததுகொடியினில்- ஒரு புலி பிறந்தது மடியினில்' என்ற ஜோடிப்பாடலில் தொடர்ந்து வரும் வரிகளான ''அடிபணிந்திட லாகுமோ - தமிழ் அரசிழந்திடக்கூடுமோ! புலி இருந்திடும் குகையினில் இனிப் புயலெழுந்திடக் கூடுமோ'' என்ற வரிகளும் மிகவும் ஆழமாக உணர்ந்து கொள்ள வேண்டிய வரிகளாகும். இது போல ஒவ்வொரு பாடலிலும் கவிஞர்கள் தமதும், விடுதலைப் புலிகளினதும் எழுச்சியையும் வேகத்தினையும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

**ஈழத்துக்கலைஞர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் ஒலிநாடா 'இந்த மண் எங்களின் சொந்தமண்' என்ற முத்திரையுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஒலி நாடா நேயர்களின் மனத்தில் எழுப்பும் உணர்வலைகளின் ஒரு பிரதிபலிப்பு இங்கே தரப்படுகின்றது.**

இசையமைப்பைப்பொறுத்த வரையில் ஒவ்வொரு பாடலின் இசையமைப்பும் மிகவும் பிரமாதமாக இருக்கிறது. ஈழத்து இசைக்கலைஞர்களின் அதிவேக வளர்ச்சி பாராட்டப்பட வேண்டியதே! மேலும் பாடல்களைப்பாடிய பாடகர்கள் மிக இனிமையாக, உணர்வோடு பாடியிருக்கின்றார்கள்.

---

### பாபு

''இந்தமண் எங்களின் சொந்தமண்''பாடலைப்பாடியவர் மிக அழகாக ஏற்ற இறக்கத்துடன் தனது இனிமையான குரலில் பாடியிருக்கின்றார். அவரது குரலில் இன்னும் பாடல்கள் கேட்க வேண்டும் போலத் தோன்றுகிறது. மிக உறுதியோடும் வீரத்துடனும் ஆரம்பிக்கும் இப்பாடலில் சட்டென்று ஈழத்தின் நிலையை உணர்த்தி அடுத்த வரிகளான, ''நீர் வளம் உண்டு - நில வளம் உண்டு - நிம்மதி ஒன்றுதானில்லை'' என்று அவர் பாடும் போது அவரது குரலில் கவலையும் ஏக்கங்களும் தெரிகின்றன. அப்படியாக உணர்வோடு ஒன்றிப்போய் பாடியிருக்கின்றார். அதே குரலுக்குரியவர்தான் அடுத்த பாடலான,

''எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகின்றோம் - தமிழ் ஈழ மண்ணை மீட்டெடுக்க ஓடிப் போகின்றோம்'' என்ற பாடலையும் பாடியிருக்கின்றார் போலத் தெரிகின்றது. அந்தப் பாடலுக்கு இன்னுமொருபடி மேலான பாராட்டுகளைத் தெரிவிக்கவேண்டும். மிக இனிமை.

இதேபோல தொட்டிலில் தூங்கும் ஈழத்தின் முத்து ஒன்றை தட்டியெழுப்பும் ஒரு தாயின் கீதமாக வரும் ''தூக்கமா கண்மணி பள்ளியெழு இந்த தொட்டிலை விட்டு நீ துள்ளியெழு'' என்ற பாடலுக்குரிய பெண்குரலும். ''பூபாளம் பாடும் நேரம் – தமிழன் புலியாகிப் போராடும் காலமோ'' என்ற பாடலுக்குரிய ஆண்குரலும் இனிமையாக புரட்சிகர இசை பாடுகின்றன. அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்: ''பாதைகள் வளையாது எங்கள் பயணங்கள்முடியாது. போகுமிடத்தில் சேரும் வரைக்கும்'' என்ற பாடலுக்குரிய குரலும் மிகவும் ஆணித்தரமான கொள்கையினை வெளிக்காட்டியது. அதே போல 'செவ்வானம் சிவந்தது ஏன் -அது செங்கொடியை நினைப்பதற்கே' என்ற பாடல் மிக இனிமையாக இருந்தது. அந்தப் பாடலுக்குரியகுரல் ஒரு சிறுவனின் குரல் போலத் தெரிகிறது. உண்மையில் சிறுவனின்குரலா அல்லது சிறுவனின் குரல் போலப் பாடப்பட்டதா என்பது தெரியவில்லை. எப்படியிருந்தாலும் பாராட்டப்பட வேண்டிய குரல் அந்தக்குரல். அது வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மொத்தத்தில் ''இந்தமண் எங்களின் சொந்தமண்'' தொகுப்பிலுள்ள பத்துப் பாடல்களும் முத்தானவை. ஈழ மக்கள் எல்லோருடைய மனதிலும் பதிந்திருக்க வேண்டிய பாடல்கள். நிச்சயமாக விரைவில் எல்லோருடைய வாய்களிலிருந்து இப்பாடல்கள் வெளிவரும் என்பதில் ஐயமில்லை. இந்தப் பாடல் தொகுப்பில் பங்குபற்றிய ஈழத்துக் கலைஞர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களை பாராட்டுவதுடன் தொடர்ந்தும் பல எழுச்சி கீதங்களையும், விடுதலைக்கீதங்களையும் வெளியிட வேண்டும், வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மலர்க தமிழீழம்

---

## காணவில்லை



### மரியாம்பிள்ளை செபரெட்ணம்

(வயது: 42)

வசாவிளானைச் சேர்ந்தவரும், 43, D8 உருத்திரபுரத்தில் வசிப்பவரும், யாழ். கூட்டுறவு திணைக்களத்தின் பிரதம லிகிதராகப் பணிபுரிபவருமான இவர், கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதிமிருசுவிலிலிருந்து கிளிநொச்சிக்கு சைக்கிளில் புறப்பட்டுச் சென்றார். இவரது அடையாள அட்டையிலுள்ள முகவரி இல. 43 கண்டிவீதி, யாழ்ப்பாணம். இவரைப் பற்றிய தகவல் ஏதும் தெரிந்தால் தயவு செய்து இவரின் சகோதரர்களுடன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். அருட்சகோதரி கொன்சீலியா, அருட்சகோதரி மரியா, திருச்சிலுவை கன்னியர் மடம், கடற்கரைவீதி யாழ்ப்பாணம்.


1125 திருநகர்,
கிளிநொச்சி.

M.E. வேதானந்தம்

R.756

---

## இதயமலர் அஞ்சலி



ஸ்ரீமான் செல்லப்பா யோகரெட்ணம்
(ஓய்வுபெற்ற நிலஅளவை அத்தியட்சகர்)
பிறப்பு: 19–10–1922
இறப்பு: 27–10–1987



திருமதி ஜெகதீஸ்வரி யோகரெட்ணம்
பிறப்பு: 31–03–1931
இறப்பு: 27–06–1984

திதி: 23-10-1990

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துடன் சேர உங்களைப் பொன்னுலகு வரவேற்று இன்று ஆண்டு பல அகன்றதாயினும் உங்கள் நினைவலைகள் நெஞ்சமதில் நிழலாடிக் கொண்டே இருக்கின்றன. எளிமை மிகுதோற்றம், இனிமை தவழும் பேச்சு, அன்புடன் ஆதரிக்கும் பண்பு இவற்றின் திருவுருவாய் வாழ்ந்த உங்களைப் பூவுலகு என்றுமே பொன்மலர் தூவி வாழ்த்தும்படி அமரவாழ்வு பெற்று விட்டீர்கள்! மலரப் போகும் தமிழீழத்தின் மலர்வுக்காய் வானிலிருந்து கூறும் உங்கள் வாழ்த்துக்கள் விடிவாய் அமையட்டும்!

என்றுமே உங்களை நினைவுகூரும்
மக்கள், மருமக்கள்.
பேரப் பிள்ளைகள்.
உற்றார், உறவினர்கள்

27, சேர் பொன். இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(R. 758)

## சிந்தனைக்கு

காரியம் ஆகுமட்டும் காலைப் பிடிப்பவன்
காரியம் ஆனபின் குடுமியைப் பிடிப்பான்.

— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 23-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05

# உருத்திராட்சப் பூனையின் உபதேசம்

சிறிலங்கா முப்படைகளில் சேர விரும்பும் மலையக இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களுக்கிடையில் மேலும் ஒரு முரண்பாட்டை தீவிரமடையச் செய்து, தமிழ் பேசும் மக்களை பலவீனமடையச் செய்வதே இதன் அடிப்படை நோக்கம் இதன் மூலம் மலையக மக்களுக்கு உரிமைகளை வழங்குவதோ, அன்றேல் வேலை வாய்ப்பளிப்பதுவோ நோக்கமல்ல. அதேவேளை சிங்கள இளைஞர்களுக்கு யுத்தத்தினால் ஏற்படும் அழிவை கட்டுப்படுத்துதல் அல்லது இல்லாமல் செய்தல் என்பதே பிரதான நோக்கமாகும்.

முஸ்லிம் இளைஞர்களும் இவ்வாறே அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகின்றனர். இதனால் இன்று கிழக்கில் சிங்கள அரசாங்கம் புரியும் தமிழர் மீதான இனப்படு கொலைகளுக்கு முஸ்லிம்களும் பொறுப்பேற்கவேண்டி வந்துள்ளதோடு, நிம்மதியாக தமிழருடன் வாழ்ந்துவந்த முஸ்லிம்மக்களும்பலநெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டி வந்துள்ளது.

இன்று முஸ்லிம் இளைஞர்களை எவ்வாறு சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்தியதோ, அதேபோன்று மலையக இளைஞர்களையும் இப்போராட்டத்தில் இழுத்துவிட எண்ணியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக நூற்றாண்டிற்கு மேலாக இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உழைத்த மலையக மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்க முன்வராத இந்தப் பௌத்த சிங்கள அரசாங்கம் இன்று தமிழ் இனத்தின் விடுதலைப் போரை அடக்குவதற்கு, அடக்குமுறையின் கருவிகளாக மலையக மக்களைப் பயன்படுத்த எண்ணியுள்ளது.

'சுதந்திரத்தின்' பின் நாற்பது வருடங்களுக்கு மேலாகப் போராடிப் பெறப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் இன்னும் பூரணமாக பயன் ஏதும் தரவில்லை. இதே போன்று பெருந்தோட்டங்களில் பல்லாண்டுகளாகத் தொழில் புரியும் தொழிலாளரின் தொழிற்சங்க உரிமைகள் இன்னும் பூரணமாகக் கிடைக்கவில்லை. இவற்றோடு காலத்திற்குக்காலம் சிறிலங்காவில் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளால் மலையக மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டார்கள்.

அதாவது அன்றிலிருந்து மலையக வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒரு நவீன அடிமைகளாகவே நடத்தப்பட்டுவந்தார்கள் ஆகக்குறைந்தளவு அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்கக்கூட எவரும் சிந்திக்கத் தயாராக இருக்கவில்லை.

ஆனால் இன்று, தேவை ஏற்படும் போது மட்டும் மலையக இளைஞர்களைப் படைகளில் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் முன் வந்துள்ளதாக அறிவித்துள்ளது. இது சிறிலங்கா அரசாங்கம் நீண்டகாலமாக மேற்கொண்டு வரும் பிரித்தாளும் தந்திரத்தின் ஒரு பகுதியேயாகும்.

மலையக இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்குவதன் மூலம் ஒரு கல்லில் இரு மாங்காய் அடிக்கும் திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ள எண்ணியுள்ளது. வடக்கு - கிழக்கில் தமிழரின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக போர்முனையில் அவர்களைப்பயன்படுத்துவதோடு, மலையகத்தில் வெடித்துக் கிளம்பவுள்ள உரிமைப் போராட்டத்தையும் அவர்களைக் கொண்டே அடக்குவது அதன் நோக்கமாகும்.

அதேவேளை சிறிலங்கா ஆயுதப்படையில் சேர்க்கப்படும், அல்லது சேரும் மலையக தமிழ் இளைஞர்கள் எவரும் சிறிலங்கா இராணுவத்தில் உயர் பதவிக்கோ அல்லது தமதுமக்களின்எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்களாகவோ இருக்கப் போவதில்லை.

இவ்வளவு காலமும் மலையகத்தில் இருந்தது போன்றே சிங்கள இராணுவத்தின் கீழ் இரண்டாம்தரப் பிரஜைகளாக, அவர்களின் எடுபிடிகளாக மூன்றாம்தர வேலைகளைச் செய்து கொண்டு நவீன அடிமைகளாகவே இருக்க வேண்டி வரும்.

# புதிர்களாய் மிளிரும் அரும்புகள்

இப்ப முந்தின மாதிரிச் சுகமா, சுதந்திரமா வான வெளியில் பறந்து திரியேலாது அடிக்கடி பொம்மர், ஹெலி அவ்ரோ அது இது எண்டு எங்களோடை போட்டிக்குப் பறக்கத் தொடங்கியிருக்குது கள். அதாலை நிண்டுபார்த்து நிதானமாய்த் தான் நானும் பறக்க வேண்டிக்கிடக்கு. சின்னச் சிட்டுக்குருவிதான் எண்டாலும் எனக்கும் உயிர்மேல ஆசை தானே. அங்கு மிங்கும் பார்த்தபடி சிறகசைத்து யாழ்ப்பாண நகருக்கும் மேலாகப் பறக்கலானேன். நகரம் எங்கோ நகர்ந்து போய்இருந் தது. இருந்தாற்போல திரும்பிப் பார்த்தால் மரங்களுக்கு கீழே ஒரே சனக்கூட்டமாய் தெரிந்தது. அந்தத் திசையை நோக்கி சிறகசைத்தேன்.

கொழும்புக்கும் ஏனைய பிற இடங்களுக்கும் போறதுக்கு 'பாஸ்' எடுக்க வேணுமாம். அதுக்காகத்தான் இந்தச்சனம் கியூவில நிற்குதாம் என்ற விடயம் மூத்திரைச் சந்திக்கு மேலாகப்பறந்தபோது தெரிய வந்தது. சரிதான் போறவை போகட்டுக்கும் எனக்கென்ன என எண்ணியபடி அங்கொரு மரக்கிளையில் சிறிது ஓய்வு எடுக்கக் குந்தினேன் ஏதோ இரைச்சல் மிகத் தூரத்தில் மெல்லியதாக கேட்கத் தொடங்கியபோது இந்தச்சனக் கூட்டத்தோடை இருக்கிறதிலும் பார்க்க கொஞ்சம் தள்ளிப்போய் இருக்கிறது பாதுகாப்புப்போல தெரிஞ்சுது. எழுந்து பறந்துபோய் தேவாலயத்திற்குப் பின்பக்கமாக கல்வித் திணைக்கள வளவில் இருந்ததொரு மரக்கிளையில் என்னை மறைத்துக் கொள்ளலானேன்.

அருகில் இருந்த கட்டிடத்திலிருந்து சில பேச்சுக்குரல்கள் என் செவிப்பறையில் வந்து மோதியது. 'இங்க அந்தப்பிள்ளை சுகந்தமாலா எல்லே இயக்கத்துக்குபோயிட்டுதாம்' என்று மெல்லிய வெளிர் நீல நிறப் புடவையோடு இருந்த ஒருத்தியின் குரல் வெளிப்பட்டது.

'என்ன டீச்சர், உண்மையாய்த்தான் சொல்லுறியளே நம்ப ஏலாமக் கிடக்கு. அந்தப் பிள்ளை சரியான கெட்டிக்காரப் பிள்ளையெல்லோ. நல்ல விவேகி, புத்தி சாலித்தனமான பிள்ளை. அது உப்பிடிச் செய்ததோ' என்று மீசையும் டவுசர் சேட்டுமாக இருந்த ஒருவர் ஆச்சரியம் தெரிவித்தார்.

'அவளுக்கு O/L நல்ல ரிசல்ற். ஆறு பாடத்திலும் டீ (D), மற்றதுகள் சீ (C), A/L இலும் நல்ல ரிசல்ற் எடுத்து யூனிவர்சிற்றிக்கு முதல்முறையிலே போவாள் எண்டு நாங்கள் முந்திச் கதைச்சம் அந்தப் பிள்ளையையே சொல்லுறியள் டீச்சர் என்று தடித்த உருவமும், மூக்குக் கண்ணாடியுமாய் இருந்த ஒருத்தி முன்தானையைச் சரி செய்தபடி தன் பங்குக்கு ஏதோ சொல்லி வைத்தாள்.

## " சிட்டு "

வேட்டியும், சேட்டுமாய் இருந்த இன்னுமொருவர் 'இந்தப் போராட்டம் சரிதான். சிங்களவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேணும். பொடியள் அடிபடத் தொடங்கினாப் பிறகுதானே தமிழனுக்கே ஒரு மதிப்பு வரத் தொடங்கினது. அதெல்லாம் சரி, ஆனா இந்தப் பெம்பிளைப் பிள்ளையளை இயக்கத்தில சேர்க்கிறதுதான் சரியில்லை. அதுகும் இப்பிடிக் கெட்டிக்காரப் பிள்ளையள் ஏன்தான் இயக்கமெண்டு போகுதுகளோ தெரியேல்லை' என நீட்டி முழக்கனானார்.

ஓகோ, நல்லதொரு உரையாடல் கிடைத்தது என்ற சந்தோஷத்தில் என் காதுகளைக் கூர்மையாக்கலானேன்.

'அந்தப் பிள்ளைக்கு வீட்டில ஏதோ பிரச்சினையாம், வீட்டில இருக்கப் பிடிக்காமல்தான் வெளிக்கிட்டுப் போனதாம்' என வெளிர் நீலநிறப் புடவை கிசுகிசுத்தது

'வீட்டில இருக்கேலாட்டால் என்ன, சிறிய தகப்பன்மார், மாமன்மார் மற்றச் சொந்தக்காரர் இல்லையே? அவையள் வீடுகளில் போய் இரண்டு மூண்டு நாளைக்கு நிண்டால் கோபம் தணிஞ்சுபோம். பிறகு வரலாம்தானே' என்று ஆலோசனை கூறினார் மீசைக்காரர்...

'நான்தான் இயக்கத்தில் சேர்ந்துப்போட்டு வந்த மாதிரியெல்லே இருக்கு சேர். நீங்கள் சொல்லுறது. வெளிர் நீலநிறப்புடவை மெல்லிய குரலில் சிணுங்கியது.

'இல்லை, அப்பிடிச் சொல்லேல்லை டீச்சர். ஆனால் நீங்களும் இந்தப் பிள்ளையோடை அடிக்கடி இது அது எண்டு அரசியல் கதைக்கிறனியள் தானே' என்றார் வேட்டிக்காரர்.

'இதென்னடா வில்லங்கமாய்க்கிடக்கு. இதுக்கும் எனக்கும் ஒரு தொடசலும் இல்லை. நான் ஏதோ கேள்விப்பட்டதைச் சொல்ல வெளிக்கிட்டா என்ர தலையிலேயே கட்டிப் போடுவியள் போல' என்றது மீண்டும் வெளிர் நீலப்புடவை.

'நமக்கென்னத்துக்கப்பா ஊர்வம்பு. நீர் உம்மட போன மாதச் செக் மாத்திப் போட்டீரே. இன்றைக்குக் கொஞ்சம் வெள்ளெணப் போனால் நல்லது என்ன மாஸ்ரர். இந்த மாதமும் செக்தானே தரப் போறியள்' என்றவாறு சம்பந்தா சம்பந்தமில்லாத பல விடயங்களை ஒரே தடவையில் பேசிக்கொண்டு போனது அந்த மூக்குக் கண்ணாடி.

'நானும் இன்னும் செக் மாத்தேல்லைத்தான். இந்த மாதச் சம்பளத்தையாவது காசாய்த் தரச்சொல்லிக் கேட்க வேணும்' என்றார் வேட்டிக்காரர்,

(தொடரும்)

ராம ஜென்ம பூமி – பாபர் மசூதிப் பிரச்சினை

# மூன்றம்சத்திட்டம் மறுபரிசீலனை ; இந்திய அரசு அறிவிப்பு

(டில்லி)

ராமர் பிறந்த இடம் பாபர் மசூதிப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்ட மூன்று அம்சத்திட்டத்தை, தொடர்புள்ள இருபிரிவினர்களும் ஏற்காததால் அதனை மறுபரிசீலனை செய்யத்தயாராக உள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

மூன்று அம்சத் திட்டத்தின்படி முஸ்லிம்களின் மனஉணர்வுகளை மதிப்பது அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டும் இந்துக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது,இதுதொடர்பாக இப்போதைய நிலையை காட்பது என்பதேயாகும்.

ஆனால் இதனை இருமதத்தைச் சார்ந்தவர்களும் குறிப்பாக பாபர் மசூதி நிர்வாகக் குழுவும் விஸ்வ ஹிந்து பரிக்ஷத்தும் ஏற்க மறுத்துள்ளனர்.

ஆகவே இந்தத் திட்டத்தை தாம் வலியுறுத்தவில்லை என அமைச்சரவைகளின் அரசியல் விவகார நிர்வாகக்குழு முடிவெடுத்துள்ளது.

இதேவேளை நேற்று புதுடில்லியில் இது தொடர்பான பேச்சு வார்த்தையில் அனைத்து மாநில முதலமைச்சர்களும் பஞ்சாப், காஷ்மீர் ஆளுநர்களும் பிரதமர் வி. பி சிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அயோத்தியில் நிலைமையை சமாளிக்கமேலதிகமாக பொலிசாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். இந்து மத அடிப்படைவாதிகள் 17, 000 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அயோத்திக்குச் செல்லும் எல்லாப்போக்கு வரத்துகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. கல்வி நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

# குவைத்தை விட்டு ஈராக் வெளியேற வேண்டும்

## – ஐ.கே. குஜ்ரால்

(துபாய்)

குவைத்தை ஆக்கிரமித்திருக்கும் ஈராக்கிய படைகள் நிரந்தரமாக நிபந்தனையின்றி வெளியேற வேண்டும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஐக்கிய அரபு எமிரேட்சிற்கு சென்று பேச்சு வார்த்தை நடத்திய இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் துபாயில் செய்தியாளர்களிடம் பேசினார்.

அதேவேளையில்வளைகுடாவில் இருந்து வெளிநாட்டுப் படைகள் விலக வேண்டும் என்றும் ஐ. நா. மன்றத்தின் தலைமையிலான சமாதானப் படையினரே நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# மலேசியாவில் ஆளும் கட்சி வெற்றி

(கோலாலம்பூர்)

மலேசியாவில் பிரதமர் மொகதீர் மொஹமட்டின் ஆளும் தேசிய முன்னணிக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது.

180 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத் தேர்தலில் மேற்படி கட்சி 127 இடங்களைப் பெற்று பெரும்பான்மைப் பலத்தை பெற்றுள்ளது.

எதிர்க்கட்சிக் கூட்டணி 48 இடங்களையும், சுயேட்சைக்கட்சி 4 இடங்களையும் பெற்றுள்ளன.

# இரத்ததானம் வழங்கினார்கள்

(உரும்பராய்)

முறைசாராக் கல்விப்பிரிவின் முதல்உதவி உரும்பராய் நிலையத்தின் உறுப்பினர்கள் நேற்று திங்கட்கிழமையாழ்.போதனா வைத்தியசாலைக்கு இரத்த தானம் வழங்கினர். இந் நிலையத்தினர்களின் செயற்பாடுகளில் இதுவும் ஒன்று.

(32)

### பயிலுனர் ஆசிரியர் தெரிவில் தவறுள்ளதாக

# புதிய பத்திரங்களைக் கொண்ட முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது

**- வட பிராந்திய கல்விப்பணிப்பாளர்**

(யாழ்ப்பாணம்)

புதிய தகைமைப்பத்திரங்கள் அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட உணவு மூத்திரை என்பனவற்றை வைத்துக் கொண்டு தமது தெரிவில் பிழை இருப்பதாக முறையிடும் எந்த பயிலுனர் ஆசிரியர்களின் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த பயிலுனர் ஆசிரியர்களுக்கான நியமனம் பத்து அங்கத்தவர்கள் கொண்ட சபையால் செய்யப்பட்டது. இவர்களின் நியமனமே இறுதி முடிவாகும், நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்காத புதிய சான்றிதழ்களை சமர்ப்பிப்பதோ, நேர்முகப் பரீட்சை நடைபெற்ற காலங்களில் அல்லது அண்மைக்காலங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட உணவு முத்திரைகளை சமர்ப்பிப்பதோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இது தவிர விண்ணப்பதாரிகள் தாங்களே தமக்கு புள்ளிகளை இட்டு பயிலுனர் ஆசிரியராகசேர்த்துக்கொள்ளும்படி வேண்டிக் கொள்வதோ எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என திரு. சுந்தரலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

இவற்றுடன் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும் விண்ணப்பித்த பாடங்களின் அடிப்படைப் புள்ளிகளில் வேறுபாடு உடையதாக இருக்குமிடத்து அவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இந்த நிலையிலும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் கடமையை ஏற்கத் தவறுமிடத்து இந்த வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு புள்ளிகள் முன்னுரிமை அடிப்படையில் புதியவர்கள் தெரிவு செய்யப்படுவர். (லோ)

## ஒயில் திருட்டைத் தடுக்க மக்கள் ஒத்துழைக்கவும்

(யாழ்ப்பாணம்)

மின்மாற்றிக்கு விடப்படும் ஒயிலை டீசல், ஹெவி டீசல் அல்லது என்ஜின் ஒயில் என கருதுவது தவறு என்றும், இதனை மின்மாற்றிக்கு மட்டும் விடுவதற்காக பெற்றோலிய கூட்டுத் தாபனத்தால் தயாரிக்கப்படுகிறது என்றும் இலங்கை மின்சாரசபை வட பகுதி பிரதிப்பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

ஆனால் அண்மைக்காலமாக மின்மாற்றிகளுக்குள் நிரப்பப்பட்டிருந்த ஒயில் களவாடப்படுகிறது என்றும், அதுவும் குடாநாட்டிற்கு மின் விநியோகம் கிடைத்தபின்பும் சில இடங்களில் களவாடப்பட்டமையுமே வருத்தமானசெயல் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் நடைபெறும் இத்தகைய சமூக விரோதச் செயல்களினால் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகளுக்குக்கூட மின்சாரம் வழங்க முடியாமல் இருக்கின்றது என்றும், ஆகவே சகல மக்களும் மின் விநியோகத்தின் அவசிய தேவையை உணர்ந்து ஒயில் களவாடுபவர்களை தடுத்தும், பிடித்துக் கொடுத்தும் ஒத்துழைப்பு நல்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மாணவர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர் கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம் பெறும். அனைத்து விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கஉறுப்பினரும் தவறாது சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

## மல்லாகவாசி மேலும் ஒருவர் மரணம்

(மல்லாகம்)

மல்லாகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பொம்மர் தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த சுப்பிரமணியம் (வயது 38) நேற்று முன்தினம் இரவுமரணமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் மேலும் ஐந்துபேர் படுகாயமடைந்து மானிப்பாய் போதனா மருத்துவமனைப் பிரிவில் சிசிச்சை பெற்று வருகின்றனர். (க)

## பொதுமகன் காலைஇழந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் வைத்துச்சென்ற மிதிவெடி ஒன்றில் சிக்கிய ஒருவர் தமது காலில் ஒன்றை இழந்துள்ளார்.

நேற்றுநண்பகல் இப்பகுதிக்குச் சென்ற பி. அந்தோனி (வயது37) என்பவரே இவ்விபத்துக்கு உள்ளானார். (க)

### கிரான் குளம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினர் சுற்றிவளைத்துத் தேடுதலை மேற்கொண்டபோது அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்களைக் கைது செய்துள்ளனர். இவர்களில் கோபால்; சிவா, ரவி, வைரமுத்து ஆகியோர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுகுணன், புவனேஸ், பாக்கியராஜா, முருகுப்பிள்ளை ஆகியோர் இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர், ஏனையோர் பின்பு விடுதலை செய்யப்பட்டனர். (மு)

### வீட்டு முற்றத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் கோப்பாய் கந்தசுவாமிகோயிலை அண்டிய பல வீடுகளும், ஞானபண்டித சைவ விருத்திச் சங்கமும், சனசமூக நிலையமும் பலத்த சேதத்திற்குள்ளாகின. (85)

## மரண அறிவித்தல்கள்

### முத்துக்குமாரு வினாயகசேகரம் (Retd. P.H.I.)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. முத்துக்குமாரு வினாயகசேகரம் 22-10-90 காலையில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு, திருமதி முத்துக்குமாரு தம்பதிகளின் புதல்வரும் சீதாதேவியின் அன்புக்கணவரும், சிவபாலன் (ஜேர்மனி) ஜோதிபாலன், இந்துமதி இவர்களின் அருமைத் தந்தையும், ஞானேஸ்வரியின் சகோதரரும், காலஞ்சென்ற பரம்சோதி, இராமலிங்கம்(அருணா றேடர்ஸ், பரந்தன்) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 22 - 10 - 90 பிற்பகல் 2 மணிக்கு யாழ். கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''நெல்லி வாசா''
190, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நா. இராமலிங்கம்
(மைத்துனர்)

(R/761)

### நடராசா - குமாரதாஸ் (J–Uduppiddy A. M. College, Valvettiturai)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா (ஐயாத்துரை) குமாரதாஸ் 14.10.90 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார். இவர் நடராசா (ஓமான்), தேவிமலர் இவர்களின் அன்பு மகனும், தி. வினோதினி, ந. சுயேந்தினி இவர்களின் அன்புச் சகோதரனும், கார்த்திகேசு – தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 15-10-90இல் உடுப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நடராசா
தேவிமலர்

பொக்கால ஒழுங்கை,
உடுப்பிட்டி.

(R/759)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தமிழ்நாட்டில் 300 முகாம்களில் 1,40,000 தமிழ் அகதிகள்

(சென்னை)

சிறிலங்கா இராணுவ அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டு, அமைதியும் பாதுகாப்பும் ஏற்படும்வரைநாங்கள்இலங்கைக்குத் திரும்பப்போவதில்லை என்று தமிழ்நாட்டிற்குச்சென்றுள்ள தமிழர்கள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் இருந்து தமிழ் நாடு சென்றுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 1,40,000 தைத் தாண்டிவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை அகதிகளுக்கென தமிழ்நாட்டில் 300அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. மேலும் 8000 பேர் மண்டபம் முகாமில் மட்டும் தங்கியுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

## வேலணைப்பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன

(தீவுப்பகுதி)

வேலணைப்பகுதியில் அண்மைக்காலங்களில் பல திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இராணுவ நடமாட்டங்களிற்குப் பயந்து மக்கள் வீடுகளை விட்டுச் செல்லும் போது திருட்டுக் கோஷ்டியினர் தருணம் பார்த்து தமது கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் வேலணை வங்களாவடியில் வடிவேலு ஆனந்தன் என்பவருடைய கடை உடைக்கப்பட்டு வானொலிக் கருவி, ரொக்கப்பணம், மற்றும் உணவுப் பொருள்கள் என்பன அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. (15)

## இருபடையினர் கால்களை இழந்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் புதைத்துவைக்கப்பட்ட கண்ணிவெடியில் சிக்கி சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த இரு சிப்பாய்கள் தமது கால்களை இழந்துள்ளனர்.

கடந்த வியாழனன்று ஏறாவூர் வீரபத்திரர் கோயிலடியில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட கண்ணிவெடி வெடித்ததில் இராணுவச்சிப்பாய் ஒருவர் தனது காலொன்றை இழந்தார். இதேதினம் செங்கலடியில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடியில்சிக்கி இன்னோர் இராணுவச் சிப்பாயும் தனது காலொன்றை இழந்துள்ளார். (மு)

## வறுமையால் தற்கொலை

மறவன்புலோவைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் குடும்பத்தின் வறுமையைச் சகிக்க முடியாத நிலையில் அலரிக்காய் அரைத்துச் சாப்பிட்டு மரணமானார்.

திரு. கே. கிருஷ்ணன்(வயது 48) என்னும் குடும்பஸ்தரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு.என் தர்மேந்திரா மரண விசாரணை நடாத்தி தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளித்துள்ளார். (24)

## உடைந்த மதகால் பயணிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

தினமும் கல்லுண்டாய் வெளியினூடாகப் பயணம் செய்யும் தீவகப் பயணிகள் அவ்வெளியில் காணப்படும் மதகில் மோதி காயமடைந்து வருகின்றனர்.

உடைந்த நிலையில்காணப்படும் இந்த மதகில் தீவுப்பகுதி பயணிகள் அராலி இறங்கு துறைக்கு இரவு வேளையிலேயே செல்லவேண்டி இருப்பதால் மதகில் காணப்படும் பள்ளத்தில் விழுந்து காயங்களுக்குள்ளாகி வருகின்றனர். (லோ)

### கோயில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இதேவேளை நகரப்பகுதிகளில் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களைப்பயன்படுத்தி சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளிலிருந்து பெறுமதியான பொருள்களைக் களவாடுவதில் இரவு நேரங்களில் திருடர் பலர் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது. (24)

### பயணிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

46) என்பவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்தார். இவர்கள் பயணம் செய்த படகும் சிறிது சேதமடைந்தது.

இதேவேளை தளவாய்என்ற இடத்தில் இதேதினம் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். (க)

### தேசிய பொதுக்கருத்தை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகூட்டத்திலேயே இந்திய மனத்திற்கான தெரிவு இடம் பெற்றது. ஒரிசா, மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். பாபர் மசூதி -ராம ஜென்ம பூமி விவகாரம் இருமதங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று இக்கூட்ட ஆரம்பத்தில் தெரிவித்த வி. பி. சிங் நாட்டின் சட்ட அமைப்பிற்கு உரிய மதிப்பை ஒவ்வொருவருக்கும் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நம்பிக்கைகளுக்கு சட்டத்திற்குமேலானதாக மதிப்பளிக்கப்படும்நிலை உருவாகுமானால் சமய சார்பின்மை என்ற அரசின் கொள்கைக்கு அதுஆபத்தாகிவிடும் என்பதையும் பிரதமர் திரு வி. பி. சிங் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக மத்திய அரசினால் முன்மொழியப்பட்ட மூன்று அம்சத் திட்டத்திற்குப் பொருத்தமான மாற்றுத் திட்டமொன்றை முன்வைக்கும் படியும், ராமஜென்ம பூமி விவகாரத்தில் பொதுக் கருத்தை எட்டும் வழிமுறைகளைக் கண்டறிய அனைவரும் பாடுபட வேண்டும் என பிரதமர் வி.பி. சிங் கேட்டுக்கொண்டார்.

### ராணுவ

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியைக் கைவிட்ட இராணுவத்தினர் பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக்கொண்டனர்.

மேலும் இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் ''பசிலன் 2000'' தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலினால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயப்பட்டும் இருக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றபோதும், இராணுவத்திற்கு ஏற்பட்ட சேத விபரங்கள் முழுமையாகத் தெரியவரவில்லை. (ச)